சென்னை-600077, புளியம்பேடு, புளியம்பேடு ரோடு, பிளாட் எண்.5, கதவு எண்.S2, Second Floor, "Pine Tree Flats" என்ற விலாசத்தில் உள்ள சுமார் 806 சதுரடி கொண்ட அடுக்குமாடி குடியிருப்பானது நம்மில் முதல் பார்ட்டிக்குச் சொந்தமானது ஆகும். மேற்படி அடுக்குமாடி குடியிருப்பினை இரண்டாவது பார்ட்டி தன்னுடைய வீட்டு உபயோக குடியிருப்புக்கா குத்தகைக்கு கொடுக்கும்படி கேட்டுக் கொண்டு முதல் பார்ட்டியும் ஒப்புக் கொண்டு மேற்படி இரு பார்ட்டி நபர்களுக்கு கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு இந்த ஒப்பந்தத்தை எழுதிக் கொள்கிறோம்.

1. சென்னை-600077, புளியம்பேடு, புளியம்பேடு ரோடு, பிளாட் எண்.5, கதவு எண்.S2, Second Floor, "Pine Tree Flats" என்ற விலாசத்தில் உள்ள சுமார் 806 சதுரடி கொண்ட அடுக்குமாடி குடியிருப்பானது இரண்டாவது பார்ட்டியின் குடியிருப்புக்காக குத்தகைக்கு விடப்படுகிறது.

2. மேற்படி இடத்திற்கு மாத வாடகை ஏதும் கிடையாது. மேலும் இரண்டாவது பார்ட்டியானவர் மேற்படி இடத்திற்குரிய பராமரிப்பு கட்டணத்தினை மேற்படி அடுக்குமாடி குடியிருப்புதாரர்கள் நல சங்கத்தில் பிரதி மாதம் செலுத்தி விட்டு இரசீதினை முதல் பார்ட்டி வசம் ஒப்படைத்து விட வேண்டியது.

3. மேற்படி போர்ஷனுக்காக நாம் இரு பார்ட்டிகளும் நிர்ணயித்த குத்தகை தொகை **ரு.4,00,000/- (ரூபாய் நான்கு இலட்சம் மட்டும்)** ஆகும். மேற்படி குத்தகை தொகையினை இன்றைய தேதியில் இரண்டாவது பார்ட்டியிடமிருந்து முதல் பார்ட்டி பெற்றுக் கொண்டதற்கு இதுவே ரசீதாகும். மேற்படி தொகையை குத்தகைக்கு விடப்பட்ட இடத்தை காலி செய்து சுவாதீனம் ஒப்படைக்கும் சமயம் திரும்ப செலுத்த முதல் பார்ட்டி சம்மதிக்கிறார். மேற்படி தொகைக்கு வட்டி இல்லை. மேலும் மேற்படி இடத்திற்கு ஏதேனும் சேதாரம் மற்றும் மின் கட்டண பாக்கி இருந்தால் அதை பிடித்துக்கொள்ள முதல் பார்டடிக்கு உரிமை உண்டு.

4. குத்தகைக்கு விடப்பட்ட பகுதியில் உபயோகப்படுத்ததும் மின்சாரத்திற்காக இரண்டாவது பார்ட்டி பகுதிக்கு பொருத்தப்பட்டுள்ள மின் அளவியின்படி அதற்குரிய தொகையினை நேரடியாக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தி விட்டு அதன் இரசீதினை முதல் பார்ட்டி வசம் ஒப்படைத்து விட வேண்டியது. மேலும் தமிழ்நாடு மின்சார வாரியத்தினால் ஏதேனும் அடிஷனல் டெபாசிட் செலுத்த கோரினால் அதை இரண்டாவது பார்ட்டி தனது சொந்த செலவில் செலுத்த ஒப்புக் கொள்கிறார். அப்படி செலுத்தப்படும் தொகையானது முதல் பார்ட்டியால் திரும்பதரத்திக்கதல்ல என இரண்டாவது பார்ட்டி ஒப்புக் கொள்கிறார்.